**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

**Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 15th day**

Friday the 29th day of May' 2026

**Sessions Case No.161/2024**

**(Crime No.377/2022 of Gandharavakottai Police Station)**

**CNR No: TNPD01-007264-2024**

| | |
|---|---|
| 1. Name of the P.S and Cr.No of the Offence. | State represented by the Inspector of Police, Gandharavakottai Police Station, in Crime. No. 377/2022 |
| 2. Name of the Accused | 1) Beer Mohamed<br><br>2) Jageer Usan<br><br>3) Suryaraj |
| 3. Father's name | 1) Abdulkareem<br>2) Sheikh Davuth<br>3) Paramasivam |
| 4. Occupation | 1) Coolie<br>2) Coolie<br>3) Coolie |
| 5. Residence | 1) South Muslim Street,<br>Kallakottai,<br>Gandaravakkottai,<br>Pudukkottai.<br>2) South Muslim Street,<br>Kallakottai,<br>Gandaravakkottai,<br>Pudukkottai.<br>3) No.315 Kaatunaval,<br>Gandarvakottai,<br>Pudukkottai. |

| | |
|---|---|
| 6. Age | 1)55<br>2) 44<br>3) 27 |
| 7. Date of Occurrence | 12.09.2022 |
| 8. Date of Complaint | 12.09.2022 |
| 9. Date of Apprehension | 1) 12.09.2022<br>2) 12.09.2022<br>3) 12.09.2022 |
| 10. Date of release on Bail | 1) 16.09.2022<br>2) 16.09.2022<br>3) 16.09.2022 |
| 11. Date of Commitment | ---- |
| 12. Date of Commencement of Trial | 13.05.2026 |
| 13. Date of Closure of Trial | 27.05.2026 |
| 14. Date of Sentence or Order | 29.05.2026 |
| 15. Date of Service of copy of Judgment or finding on accused | 29.05.2026 |
| 16. Explanation of Delay | Nil |
| 17.Date of Questioning of the Accused u/s 228, 240,246 and 251 of Code: | 04.07.2025 |
| 18.Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19.Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>PW1 - 13.05.2026 |

| | |
|---|---|
| | PW2 - 26.05.2026 |
| 20.Examination of the Accused u/s 313 of the Code. | 27.05.2026 |
| 21.Abscondence of an accused an her appearance/production: | --- |
| 22.Victim Compensation Order: | ----- |
| 23.The Period of remand of the Accused | 1) 12.09.2022 -- 16.09.2022<br>2) 12.09.2022 -- 16.09.2022<br>3) 12.09.2022 -- 16.09.2022 |
| 24.Grant of stay by superior Courts and the results thereof; and | Nil. |
| 25.Date of filing of the complaint/Final report in the Court | 12.09.2022 |

| | |
|---|---|
| 1. Charges framed against the Accused | u/s 273,328IPC and sec. 6(a)r/w 24(1) The Cigarette and other Tobacco Products Act 2003 |
| 2. Reply of the Accused | Not guilty |
| 3. Finding of the Judge | It has been decided that they are not found guilty. |
| 4. Judgment | முடிவாக எதிரிகள் சட்டப்பிரிவுகள் ச/பி 273, 328 இதச கீழான குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 258 BNSS கீழ் விடுதலை செய்தும் மேலும் ச/பி 6(a)r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003–ன் படி குற்றவாளிகள் என முடிவு செய்யப்பட்டு எதிரிகளுக்கு அபராதம் தலா ரூ.200/– விதித்தும் அபராதம் செலுத்த தவறினால் 3 நாட்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளுக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட |

| | |
|---|---|
| | அபராதத் தொகை ரூ.200/- x 3 = 600 ஆகும்.<br><br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற ஆர்பி எண்.8/2026<br>அயிட்டம் எண்.1,2 ஆகியவை போதை தரக்கூடியவை என்பதால் இவ்வழக்கின் மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் கந்தர்வகோட்டை காவல் சார்பு ஆய்வாளர் மூலமாக அழிக்கவும்,<br><br>அயிட்டம் 3 மற்றும் அயிட்டம் 4 ஆகியவை மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமைக்கவும்<br><br>அயிட்டம் எண்.5 ல் கண்ட பணம் ரூ.13,400/-ஐ இவ்வழக்கின் மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்து அரசுக்கு ஆதாயம் செய்தும்<br><br>அயிட்டம் எண்.6 ல் கண்ட இருசக்கர வாகனம் மிகவும் பழையது என்பதாலும் அவை unclaimed என்பதாலும் அவற்றை இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்தும் உரிய சட்ட முறைப்படிக்கு வருவாய் துறையினர் மூலம் அரசுடமை செய்யவும்<br><br>அயிட்டம் எண்.7 இருசக்கர வாகனத்தை மனுதாரர் இடைக்கால பிணையில் சிஆர்எம்பி 1714/2022 மூலம்பெற்றுச்சென்றுள்ளதால் அவற்றை அவரே வைத்துக்கொள்ளவும் மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் |

| | |
|---|---|
| | பிணைமுறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு 27.05.2026–ம் தேதியன்று என் முன்னர் முழுமையான விசாரணைக்காக வந்து அரசு தரப்பில் அரசு கூடுதல் குற்றத்துறை அறிவார்ந்த வழக்கறிஞர் திரு. எம். செந்தில்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் , எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சோலைமுத்தையா,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் நடத்திட இருதரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று வரை என் சீரான பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

12.09.2022–ம் தேதி 13.00 மணிக்கு கந்தர்வகோட்டை காவல் நிலைய சரகம் கல்லாக்கோட்டை உதயம் மளிகை கடையில் இவ்வழக்கின் எதிரிகள் வெள்ளைநிற சாக்குப்பையை சோதனை செய்தபோது உயிருக்கும் உடலுக்கும் உள்உறுப்புகளுக்கும் தீங்கை விளைவிக்கக்கூடிய Hans Vimal Pan Masala ஆகிய போதைப்பொருட்கள் உட்கொண்டால் உடல் நிலைக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் தெரிந்தே போதை தரக்கூடிய பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் காரணமாக, கந்தர்வகோட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் மீது u/s 273, 328 IPC and sec. 6(a)r/w 24(1) The Cigarette and other Tobacco Products Act 2003 – ன் கீழ் நீதித்துறை நடுவர் , கந்தர்வகோட்டை நீதிமன்றத்தில் குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையை கோப்புக்கு எடுத்துக்கொண்ட கந்தர்வகோட்டை நீதித்துறை நடுவர் அவர்கள் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளார்கள். எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜரானதும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவற்றையும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யப்படதக்கது என்பதால் மேற்படி நடுவர் அவர்கள் புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச பிரிவு 209 ன் படி வழக்கை ஒப்படைவு செய்து உத்தரவிட்டுள்ளார். அவ்வாறு ஒப்படைவு செய்யப்பட்டதில் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் முறையாக விசாரணை செய்து முடிக்குமாறு அனுப்பப்பட்ட இந்த வழக்கை கோப்புக்கு எடுத்துக் கொண்ட இந்த நீதிமன்றம் எதிரிகள் தரப்பு மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் வாதங்களை கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதுமான காரணங்கள் இருப்பதாக தெரியவந்ததால், இந்த வழக்கின் எதிரிகள் மீது u/s 273, 328IPC and sec. 6(a)r/w 24(1) The Cigarette and other Tobacco Products Act 2003 –ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து , அதனை எதிரிகளுக்கு படித்துக்காட்டி விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்றார்கள். எனவே, அரசு தரப்பை மெய்பிக்கவேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. இந்த வழக்கில் அரசு தரப்பில் அசா1 மற்றும் 2 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அசாஆ1 முதல் 4 வரையிலான

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசு தரப்பு சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களிலிருந்தும் இதர ஆவணங்களிலிருந்தும் வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு–

1) அசா1 திரு. ரமேஷ் தனது சாட்சியத்தில் தான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 12.09.2022–ம் தேதி 13.00 மணிக்கு நகர் ரோந்து பணியாக SI தமிழ்செல்வன் SSI சோலை ஆகியோருடன் ரோந்து பணியில் இருந்தபோது கிடைக்க பெற்ற ரகசிய தகவலின்படி புதுக்கோட்டை To தஞ்சாவூர் உதயம் மளிகை கடையில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலை பெற்று கடையை கண்காணித்தபோது வெள்ளை நிற உரப்பையில் ஏதோ எடுத்து விற்பனை செய்வதாக கண்டறிந்து அவர்களை பார்த்தும் போலீஸ் பார்ட்டியாகிய தங்களை பார்த்ததும் ஓடி எத்தணித்தவர்களை வளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது சுமார் 25 பாக்கெட்டு எடை 7 கிலோ 500 கிராம் கால்ஸ் மற்றும் பான் மசாலா பாக்கெட்டு இருந்ததை கண்டு அதை விற்பனை செய்த பீர் முகமது, ஜாகீர் உசேன், சூரியராஜ் ஆகியோர்களை பிடித்து விசாரணை செய்யும் போது அவர்களது கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற சாக்குபையை சோதனை செய்தபோது கான்ஸ் மற்றும் பான் மசாலா ஆகிய போதை பொருள் இருந்ததால் 13.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் அதில் நானும் SSI சோலையும் கையொப்பம் செய்தோம் என்றும் அதற்கான கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.1 என்றும் 14.30 மணிக்கு மகஜரை

கைப்பற்றிய இரண்டு இருசக்கர வாகனத்தை கைப்பற்றினோம் என்றும் பின்பு எதிரிகள் வைத்திருந்து இரண்டு பட்டன் செல் மற்றும் ஒரு ஆண்ட்ராய்டு செல்போனை கைப்பற்றினோம் என்றும் பின்பு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய துணையாக இருந்தேன் என்றும் சாட்சி 2 சோலை சிறப்பு உதவி ஆய்வாளர் 11.02.2023 அன்று இயற்கையாக இறந்து விட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா2 திரு. விக்னேஷ் தனது சாட்சியத்தில் தான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் இதற்கு முன்பு கந்தர்வக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 377/22 வழக்கை விசாரித்த உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் கையொப்பம் எனக்கு பரிட்சயமானதாகும். அவர் பணி ஒய்வு பெற்று தற்போது தஞ்சாவூர் A to Z மருத்துவமனையில் மிகவும் சுகவீனம் காரணமாக மருத்துவசிகிச்சையில் உள்நோயாளியாக உள்ளதால் வழக்கை விரைந்து விசாரித்து முடிக்கும் வகைக்கு நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 12.09.2022–ம் தேதி 13.00 மணிக்கு கந்தர்வக்கோட்டை காவல் உதவி ஆய்வாளராக இருந்த தமிழ்செல்வன் மற்றும் ரமேஷ் ஆகியோருடன் கந்தர்வக்கோட்டை காவல்நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த போது ரகசிய தகவலாளி நேரில் சென்று Hans போதைப்பொருள் விற்பதாக தகவல் கூறியுள்ளதன் அடிப்படையில் கந்தர்வக்கோட்டை to தஞ்சாவூர் ரோட்டில் பஜார் சாலையில் உதயம் மளிகைக்கடையை கண்காணித்த போது அந்த கடையில் உரிமையாளரான பீர்முகமது மற்றும் அவரது கடை விற்பனையாளர்கள் சாகீர்உசேன் மற்றும் சூர்யராஜ் கடைக்குள் இருந்த

வெள்ளைநிற சாக்குப்பையில் இருந்து Hons vimal பாக்கு என்ற போதைப்பொருளை பொதுமக்களுக்கு அநியாய விலைக்கு விற்று கொண்டிருந்துள்ளார்கள். இதனை சார்பு ஆய்வாளர் பார்ட்டி சகிதம் சென்று கண்டுபிடித்து கையும் மெய்யுமாக எதிரிகளையும் Hons போதைப்பாக்குகள் 25 பாக்கெட்டுகள் அடங்கிய 7.500 கி.கி Hons vimal பாக்கு என்ற போதைப்பொருளையும், பின்பு 53 பாக்கெட்டுகள் அடங்கிய 4.600 கி.கி அடங்கிய பான் மசாலா ஆகியவற்றை இவ்வழக்கின் எதிரிகள் பொதுமக்களுக்கு விற்பனைக்காக கடையில் வைத்திருந்ததாலும், அந்த பாக்கை பொது மக்கள் உட்கொள்ளும் போது வாய்புற்று நோயையும், நுரையீரல் புற்றுநோயையும் ஏற்படுத்தவும், உயிருக்கு ஆபத்தாகவும் அமையக்கூடிய போதைப்பாக்குகளை எதிரிகளிடமிருந்து சார்பு ஆய்வாளர் தமிழ் செல்வன், சாட்சிகளாக சிறப்பு உதவி ஆய்வாளர் சோலை மற்றும் தலைமை காவலர் திரு. ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார் என்றும் அதற்கான கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 என்றும் பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து எதிரிகள் பெயரில் காவல்நிலைய குற்ற எண் 377/22 ன் பிரகாரம் சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வன் இ.த.ச பிரிவுகள் 273, 328, உடனினைந்த 6(a) r/w 24(1) ன் பிரகாரம் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 என்றும் பின்பு எதிரிகள் எந்த துன்புறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தமிழ்செல்வன் கையொப்பம் செய்துள்ளார். பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 95 மூலமாக கந்தர்வக்கோட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும் அதற்கான ஆர்.பி.எண்

38/2022 என்றும் அந்த படிவம் எண் 95 அ.த.சா.ஆ 3 என்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 7.500 கி.கி Hons போதைப்பொருள் கந்தர்வக்கோட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 2 இரு சக்கர வாகனங்களின் புகைப்படங்கள் 2 எண்ணிக்கை அ.த.சா.ஆ 4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7.** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியம் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் கேள்வி கேட்டபோது பொய் சாாட்சியம் என்றும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினார்கள்.

8. இந்த வழக்கில் ஆய்வுக்கு வரும் பிரச்னை என்னவென்றால், எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 273, 328 IPC sec.6(a) r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? அல்லது இல்லையா?என்பதேயாகும்.

9. அறிவார்ந்த அரசு தரப்பு குற்ற துறை வழக்குரைஞர், தனது வாதுரைப்பில் எதிரிகள் மீதான இதசபிரிவு 273, 328 IPC sec.6(a) r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003 பிரிவுகளின் கீழான குற்ச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, எதிரிகளை தண்டிக்கத்தக்க

குற்றவாளிகள் என கண்டுபிடித்து தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் தன்னுடைய வாதுரைப்பில் எதிரிகள் எவ்வித குற்றச் செய்கையிலும் ஈடுபடவில்லை என்றும் எதிரிகளின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் , வழக்கு சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் ஆகவே எதிரிகளை நிரபராதி என கண்டுபிடித்து விடுதலை செய்யவேண்டும் என வாதித்துள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அசா1 ஆக இவ்வழக்கில் திரு. ரமேஷ் , சிறப்பு சாப்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.09.2022-ம் தேதி பகல் 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வன் , சிறப்பு சார்பு ஆய்வாளர் சோலை ஆகியோர்களுடன் ரோந்து செய்தும், புதுக்கோட்டை to தஞ்சாவூர் உதயம் மளிகை கடையில் அரசால் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று மளிகை கடையில் 25 Hans பாக்கெட்டுகள் 7.500 + 4.600 கிகி எடையுள்ள போதைப்பொருளையும் கைப்பற்றியும் அதனை சார்பு ஆய்வாளர் விக்னேஷ்சின் சாட்சியத்தின் பிரகாரம் , சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வன் 1வது எதிரிக்கு சொந்தமான மளிகை கடையில் அசாஆ1 கைப்பற்றுதல் மகசர் வழி கைப்பற்றியும் உள்ளது குறித்து அசா1 மற்றும் அசா2 முன் வைத்துள்ள சாட்சியம் நடந்த சம்பவம் பொறுத்து அதனை மெய்ப்பிக்கும் வகையில் உள்ளதா? என்பது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

12. மேலும், இதுகுறித்து அசா1, அசா2 ன் சாட்சியத்தின் பிரகாரம் சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வன் அசா1–ன் முன்னிலையில் 1வது எதிரிக்கு சொந்தமான உதயம் மளிகை கடையில் அரசு அனுமதியின்றி இவ்வழக்கில் Hans போதை புகையிலையை விற்பனைக்கு வைத்திருந்துள்ளதும் அது வகைக்கு அசா1 கடையின் உரிமையாளராகவும் அசா2 மற்றும் அசா3 கடையின் விற்பனையாளராக இருந்து Hans போதைப்பொருளை அரசு அனுமதியின்றி விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அசா1 மற்றும் அசா2 ன் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

13. இந்நிலையில், அசா2 தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரிகள் உதயம் மளிகை கடையில் விற்பனைக்கு வைத்திருந்துள்ள Hans என்ற புகையிலை 7.500 + 4.600 கிகி எடையுள்ள பாக்கெட்டுகள் உண்மையில் உடனடியாக Cancer விளைவிக்கக்கூடியதா என்பது குறித்தும் , அந்த தடய சொத்து விஷதன்மை உடையது என்பது குறித்தும் மெய்ப்பிக்கும் வகைக்கு, அசா1 மற்றும் 2 மற்றும் சோதனை மேற்கொண்ட சார்பு ஆய்வாளரால் (திரு. தமிழ்செல்வன்) வழக்கில் கண்ட புகையிலை பாக்கெட்டுகளை தடய அறிவியல் பகுப்பாய்வு இரசாயன கூடத்திற்கு அனுப்பவும், பகுப்பாய்வு செய்யவும் காவல் சார்பு ஆய்வாளர் எந்த முயற்சியும் நீதிமன்றத்தின் மூலம் மேற்கொண்டு இருக்கவில்லை.

14. ஆகவே, மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் Hans என்ற 7.500 + 4.600 கிகி எடையுள்ள புகையிலை பாக்கெட்டுகள் விசஷத்தன்மை உடைய ஒன்று என்பது அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி நிரூபணம்

செய்யப்பட்டிருக்கவில்லை . 7.500 + 4.600 கிகி எடையுள்ள புகையிலை பாக்கெட்டுகளில் உள்ள புகையிலை பாக்கினை உட்கொள்ளும் பட்சத்தில் அதனால் மனித உயிருக்கு என்ன கேடுவிளையும் என்பது பொருட்டு தகுதி வாய்ந்த மருத்துவ கல்லூரி மருத்துவரிடம் கருத்துரை பெற்று அசா1, 2 இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கவில்லை.

15. எனவே, மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் எதிரிகள் மீதான இதச பிரிவு 273, 328 –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் போதைப்பொருள் விஷத்தன்மை வாய்ந்தது என அரசு தரப்பில் அறிவியல் பூர்வமாக நிரூபிக்க தவறியுள்ளதால் அது வகைக்கு, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக நல்கியும், எதிரிகள் இதச 373, 328 –ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றும் தீர்மானிக்கிறது.

16. மேலும், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் அசா1 மற்றும் அசா2 ஐ சம்பவ இடத்தில், சம்பவ சமயம், சம்பவ நேரத்தில் 1வது எதிரிக்கு சொந்தமான உதயம் மளிகை கடையில் எதிரிகள் மூவரும் சேர்ந்து Hans என்ற புகையிலை பாக்கெட்டுகள் இருந்த வெள்ளைநிற சாக்கு பையை சம்பவ இடத்தில் மளிகை கடையில் விற்பனைக்கு வைத்திருந்துள்ளதால் அரசு தரப்பில் அசா1 மற்றும் அசா2 சாட்சியத்தின் பிரகாரமும், அசா1, அசா2 எதிரிகளை குறிப்பிட்டும் அடையாளபடுத்தியும் எதிரிகள் தாங்கள் புகையிலை பொட்டலங்கள் இருந்த வெள்ளை நிற சாக்கு பையை உதயம் மளிகை கடையில் விற்பனைக்கு வைத்திருந்துள்ளது குறித்து எதிரிகளை அடையாளபடுத்தி

சாட்சியம் முன்வைத்துள்ளதை ஏற்றும், அது வகைக்கு எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 6(a) r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003 –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் ச/பி 6(a) r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003–கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 6(a)r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் அசா1 மற்றும் அசா2 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ4 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

18. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் சட்டப்பிரிவுகள் 6(a)r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. ஆகவே எதிரிகள் சட்டப்பிரிவு 6(a)r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என்று முடிவு செய்து, எதிரிகளுக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவ, எதிரிகள் கீழ்கண்டவாறு கூறினார்கள்.

1) எனது வயது 59 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும்.

2) எனது வயது 48 ஆகும். என்னை மன்னித்து விடுதலைசெய்ய வேண்டும்.

3) எனது வயது 29 ஆகும். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும்.

ஆகவே, எதிரிகளின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2024-ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் எதிரிகள் தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார்கள் என்பதாலும் எதிரிகளின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிகளுக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

20. முடிவாக எதிரிகள் சட்டப்பிரிவுகள் ச/பி 273, 328 இதச கீழான குற்றத்திற்கு குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 258 BNSS கீழ் விடுதலை செய்தும் மேலும் ச/பி 6(a)r/w 24(1) of the Cigarette and other Tobacco Products Act 2003-ன் படி குற்றவாளிகள் என முடிவு செய்யப்பட்டு எதிரிகளுக்கு அபராதம் தலா ரூ.200/- விதித்தும் அபராதம் செலுத்த தவறினால் 3 நாட்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளுக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.200/- x 3 = 600 ஆகும்.

21. இவ்வழக்கில் இந்நீதிமன்ற ஆர்பி எண்.8/2026

அயிட்டம் எண்.1,2 ஆகியவை போதை தரக்கூடியவை என்பதால் இவ்வழக்கின் மேல்முறையீடுஅல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் கந்தர்வகோட்டை காவல் சார்பு ஆய்வாளர் மூலமாக அழிக்கவும்,

அயிட்டம் 3 மற்றும் அயிட்டம் 4 மனுதாரர்கள் இடைக்கால பிணையில் சிஆர்எம்பி 1986/2022 மற்றும் 1985/2022 மூலம் பெற்றுச்சென்றுள்ளதால் அவற்றை அவர்களே வைத்துக்கொள்ளவும் மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும்

அயிட்டம் எண்.5 ல் கண்ட பணம் ரூ.13,400/-ஐ இவ்வழக்கின் மேல்முறையீடுஅல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்து அரசுக்கு ஆதாயம் செய்தும்

அயிட்டம் எண்.6 ல் கண்ட இருசக்கர வாகனம் மிகவும் பழையது என்பதாலும் அவை unclaimed என்பதாலும் அவற்றை இவ்வழக்கின் மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுடமை செய்தும் உரிய சட்ட முறைப்படிக்கு வருவாய் துறையினர் மூலம் அரசுடமை செய்யவும்

அயிட்டம் எண்.7 இருசக்கர வாகனத்தை மனுதாரர் இடைக்கால பிணையில் சிஆர்எம்பி 1714/2022 மூலம்பெற்றுச்சென்றுள்ளதால் அவற்றை அவரே வைத்துக்கொள்ளவும் மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் பிணைமுறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம்

ஆண்டு மே திங்கள் 29–ம் நாள்  அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM Digitally signed by T PANNEERSELVAM Date: 2026.05.29 17:16:43 +0530

தனி அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட
மற்றும் அமர்வு நீதிபதி , புதுக்கோட்டை.

சாட்சி பட்டியல்-

அரசு தரப்பு சாட்சிகள்-

| | |
|---|---|
| அசா1 | திரு. ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் . |
| அசா2 | திரு. விக்னேஷ், காவல் நிலைய உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்;

| | |
|---|---|
| அசாஆ.1 | கைப்பற்றுதல் மகசர் . |
| அசாஆ.2 | முதல் தகவல் அறிக்கை. |
| அசாஆ.3 | படிவம் எண்.95 |
| அசாஆ.4 | வழக்கில் கைப்பற்றப்பட்ட 2 இருசக்கர வாகனங்களின் புகைப்படங்கள். |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்– இல்லை.

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–இல்லை.

T PANNEERSELVAM Digitally signed by T PANNEERSELVAM Date: 2026.05.29 17:16:52 +0530

தனி அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட
மற்றும் அமர்வு நீதிபதி , புதுக்கோட்டை.

Fair/ Draft

SC 161/2024

Judgment Date:29.05.2026.